கட்டுரை.

## ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்

இன்றைய 21ம் நூற்றாண்டிலே தொழிநுட்பமும் நாகரிகமும் எவ்வளவு வளர்ச்சியடைந்தாலும் ஆதிகாலம் தொட்டு ஒவ்வொரு மனிதர்களிடமும் மாறாமல் இருக்கும் ஒரே ஒரு விடயம் மதமும் மதம் சார்ந்த நம்பிக்கையுமே ஆகும். மனிதன் தன்னுடைய வாழ்க்கையை மதம் மற்றும் மதம் சார்ந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே வழிநடத்தி செல்கின்றான். மனிதன் இருக்கும் வரை மதம் இருக்கும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளிப்படையான உண்மை ஆகும். ஒவ்வொரு மனிதர்களும் தமது பிறப்பை அடிப்படையாகக் கொண்டோ / தமது பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டோ / தம்முடைய சுய விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டோ பல்வேறு வகையான மதங்களில் ஏதாவது ஒன்றை பின்பற்றி வருகிறார்கள். தற்போது உலகமெங்கும் அண்ணளவாக 4000 மதங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பௌத்தம், சீக்கியம், யூதம், சமணம், கன்பூசியம் மற்றும் ஷிந்தோ ஆகிய மதங்கள் உலகில் அதிகம் பின்பற்றப்படும் மதங்களாக காணப்படுகின்றன.

மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே மதமும் தோன்றியது என புதைபொருள் ஆய்வாளர்களும் மானிடவியலாளர்களும் கூறுகின்றனர். இதுவரை நிபுணர்கள் கண்டுபிடித்தபடி' எந்த விதமான மதப்பற்றுமில்லாத மக்கள் எந்த இடத்திலும் வாழ்ந்ததே கிடையாது என்று 'தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா' கூறுகின்றது. உலகில் பல்வேறு மதங்கள் காணப்பட்டாலும் அனைத்து மதங்களுமே ஒரே விதமான நல்வழியையும், நற்பண்புகளையுமே மனிதர்களுக்கு போதிக்கின்றன. உலகிற்கு இறைவன் ஒருவனே. ஆனால் அந்த இறைவனுக்கு பல்வேறு வடிவங்களைக் கொடுத்து மனிதன் தன்னுடைய பக்தியை வெளிப்படுத்துகின்றான். ஆகவே இங்கு ஒரு மதம் உயர்வானது, ஒரு மதம் தாழ்வானது என்று கூறுவது முட்டாள்தனமான ஒன்றாகும். அனைத்து மதங்களும் சமமானவை. அனைத்து மதங்களும் சிறந்தவை. அவை மனிதனை நல்வழிப்படுத்துகின்றன.

அனைத்து மதங்களும் வெவ்வேறு வழியில் சென்றாலும், இறுதியில் சென்று முடியும் இடம் அனைத்து மதங்களுக்குமே ஒன்று தான். அதாவது வெவ்வேறு முறையில், வெவ்வேறு இறைவனை வழிபட்டாலும் அனைத்து மதங்களுமே மனிதர்களின் வாழ்க்கையை செம்மைப் படுத்தும் நற்பண்புகளையே போதிக்கின்றன. அனைத்து மதங்களுமே அன்பு, அடக்கம், பொறுமை, சமாதானம், அறம், ஜீவகாருண்யம், ஒற்றுமை, சுய ஒழுக்கம், பகிர்ந்துண்ணல், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை மனிதர்களிடையே வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இதை மனிதர்கள் புரிந்து கொள்ளும் பட்சத்தில் அனைத்து மதங்களையும் மதிக்க பழகுவார்கள். இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டால் மதங்களுக்கிடையிலான போட்டியும், பகையுணர்வும் நீங்கி மத நல்லிணக்கம் வளரும். இதனால் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான மத சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். இதனையே அமெரிக்க ஜனாதிபதியான ஜோ பைடன் தனது ட்விட்டரில் 'அனைத்து மக்களும் தங்கள் மதவழிபாட்டு முறைகளை பின்பற்றுவதற்கான சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும். அனைவரும் மதவெறிக்கு எதிராக நிற்க வேண்டும்' என்று அண்மையில் தெரிவித்துள்ளார்.

மதங்கள் மனிதர்களிடையே இருக்கும் மிருக குணத்தை நீக்கி வன்முறையை ஒழிப்பதற்காகவே தோற்றம் பெற்றன. ஆனால் இன்று வன்முறையை தோற்றுவிப்பதற்கு மதங்களையே ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள். இலங்கையில் 2019 சித்திரை மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இதற்கு எடுத்துக்காட்டாகும். பல்வேறு தனிப்பட்ட மற்றும் அரசியல் நோக்கங்களுக்காக குறிப்பிட்ட மதகுழுக்களைச் சேர்ந்தவர்களைத் தூண்டி சில மதங்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது. இது மிகவும் தவறான விடயமாகும். எந்த இறைவனுமே தம்மை வணங்கவில்லை என்பதற்காக நம் பக்தர்களை தண்டிப்பதில்லை. ஆனால் கடவுள் பெயரை சொல்லி வன்முறைகளில் ஈடுபடுபவர்களை நிச்சயம் கடவுள் தண்டிப்பார். இதைப் புரிந்து கொண்டு அனைத்து மதங்களையும் சமமாக எண்ணி மத சுதந்திரத்தை ஏற்படுத்த வேண்டும்.

மதங்கள் பல தோன்றி மனிதர்களை வேறுபடுத்துவது இங்கு நோக்கமல்ல. ஒவ்வொரு மனிதர்களும் வெவ்வேறான மதங்களை பின்பற்றுகிறார்கள். இருப்பினும் அவர்கள் சக மனிதர்களே என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதனையே கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடுகின்றார். மனிதநேயம் என்ற ஒன்றினால் பிற மனிதர்களோடு அன்பு பாராட்டுதல் சிறந்தது. மறைமனால் இங்கே அனைவரும் சமம் என்ற உண்மையை நாம் புரிந்து கொண்டு மரிவினைகளை விடுத்து வாழ வேண்டும் என்பதைத் தான் அனைத்து மதங்களும் கற்பிக்கின்றன.

அனைத்து மதங்களும் அன்பையே போதிக்கின்றன. அன்பே சிவம் என்கிறது இந்து சமயம். பிற மனிதர்கள் மீதும் உயிர்கள் மீதும் கருணை கொள்ள வேண்டும் என்கிறது. உன்னைப்போல் அடுத்தவனையும் நேசிக்க வேண்டும் என்கிறார் இயேசு கிறிஸ்து. கிறிஸ்தவ மதமும் பிறர்மீது கொள்ளும் உயர்ந்த கருணையே இறைவனுக்கு செய்யும் உயர்ந்த சேவை என்று போதிக்கின்றது. அன்பு, கருணை, சகிப்பு, ஒற்றுமை போன்ற விடயங்களை கிறிஸ்தவ மதம் கற்பிக்கின்றது. அதுபோல பௌத்த மதத்தில் கௌதம புத்தர் அன்பையும் அமைதியையும் கொண்டு வாழ்பவனே பௌத்தன் என்கிறார். அதுபோல இஸ்லாமின் புனித நபி அவர்கள் மனிதம் காத்து வாழ்வதே இஸ்லாமியர்களின் உயர்ந்த அறம் என்கிறார். இவ்வாறு உலகின் அனைத்து மதங்களும் நல்வழியைத்தான் போதிக்கின்றன.

மதங்களை சரியாகப் புரிந்து கொள்ளாத சில மனிதநேயமற்ற மனிதர்கள், அரசியல்வாதிகள், தலைவர்கள் அவர்களை நம்பியுள்ள மக்களையும் நாட்டையும் பிளவுபடுத்துகின்றனர். மதவாதத்தை விதைத்து அரசியல் இலாபம் தேடுவதும், தீவிரவாத அமைப்புக்களை உருவாக்குதல் போன்ற இழிசெயல்களில் ஈடுபடுவதும் கண்டிக்கப்பட வேண்டியவைகளாகும். இது போன்ற நிகழ்வுகள் உலகத்தின் அமைதியை சீர்குலைத்துக்கொண்டிருக்கின்றன. மனிதர்களிடையே மதநல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை இருக்குமானால் இவ்வுலகம் அமைதி பெறும். மதங்கள் வெவ்வேறாக இருந்தாலும் அவை மனிதம் ஒன்றைத்தான் போதிக்கின்றன. ஆகவே மனிதம் பேணினால் இவ்வுலகம் அன்பால் நிலைக்கும் என்பது திண்ணம்.

இலங்கை என்ற பல்லின சமூகத்தைக் கொண்ட நாட்டில் வாழும் நாம் ஒவ்வொருவரும் சமாதானத்தின் தூதர்களாவோம். ஏனெனில் இலங்கை என்ற தாயிற்கு சிங்களவர், முஸ்லிம்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என பல பிள்ளைகள் இருக்கின்றனர். தாயும், சேயும் எத்தனை பாசம் மிக்கவர்களோ அதுபோல் தான் இலங்கைத்தாயின் பிள்ளைகளான நாமும் எமது தாயின் மீதும், நம் ஒவ்வொருவருக்குள்ளும் பாசமும், பற்றும் உள்ளவர்களாக இருப்பது அவசியம். ஒரு தாயிற்கு பல பிள்ளைகள் என்றபோது எவ்வாறு அப்பிள்ளைகளின் குணங்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுமோ அதுபோல் தான் ஒவ்வொரு மதத்தின் கொள்கைகளும் வேறுபட்டிருக்கும். ஆகவே ஏனைய மதத்தவர்களை நம் சகோதரர்களாக எண்ணி அனைவருடனும் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும். கொள்கைச் சுதந்திரம், தனிமனித சுதந்திரம் போன்றவற்றை மதிக்கும் நாடுகளில் நமது நாட்டிற்கு தனியிடம் உண்டு. சர்வமதங்களுக்கு மத்தியிலும் சமாதானத்தின் விதையைத் தூவிய நாடு நம் நாடு. எனவே இங்கு வாழும் மக்களாகிய நாம் சகோதரத்துவத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

மத உணர்வுகளை மதிக்கும் பொழுது மண்ணில் போராட்டம் என்ற ஒன்றுக்கு அவசியமே இல்லை. அனைவரது மதக் கொள்கைகளையும் மதிக்கத் தெரிந்தால் நிச்சயமாக மதத்தாலான ஒரு நாட்டைக் கட்டியெழுப்பலாம். மதங்களை சரியாகப் புரிந்து கொண்டால் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படாது. மதங்கள் சமாதானத்தைப் போதிக்குமே தவிர சச்சரவுகளை வளர்க்காது. எல்லா மதத்தவர்களும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ வேண்டும். உதாரணமாக இந்துக்களின் விழாக்களில் சுவாமி ஊர்வலங்களின் போது கிறிஸ்தவ தேவாலயங்களில் தாகசாந்தி நிலையங்கள் அமைத்தல், முஸ்லிம்களின் விழாவான ரம்ழான் போன்ற தினங்களிலும், கிறிஸ்தவர்களின் சிறப்புப் பண்டிகையான கிறிஸ்மஸ் பண்டிகை தினங்களிலும் வீடுகளில் சமைத்த உணவுகளை அனைத்து மதத்தவர்களுடனும் பகிர்ந்துண்ணல் போன்ற செயற்பாடுகள் மூலம் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வளர்த்துக் கொள்ளலாம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எனும் முன்னோர் பொன்மொழிக்கு இணங்க நாம் அனைவரும் ஒன்றுபட்டால் நிச்சயமாக ஒளிமயமான எதிர்காலம் உருவாகும் என்பதில் ஒரு துளியேனும் ஐயமில்லை.

நன்றி.

முழுப்பெயர் : தெய்வேந்திரன் கஜிதா

வயதுப்பிரிவு : 16-29

மின்னஞ்சல் : Theivendrankajitha@gmail.com.

தே. அடையாள அட்டை இல : 986242660V .

இறுதித்திகதியில் வயது : 23 வருடம் 4 மாதம் 7 நாட்கள் .

ஆக்கம் : கட்டுரை .